# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**6 |
| Name | : | **சதீஸ்குமார் (காவல் ஆய்வாளர்)** |
| Father's / Husband Name | : | |
| Address | : | |
| Age | : | 41/2026 |

**<u>தேதி : 04.03.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **<u>2, 4 எதிரிகள் ஆஜர், 1, 3, 5 முதல் 9 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்டம் நங்கவரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.11.2024ம் தேதி 16.00 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோத சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்ராஜா அவர்கள் பதிவு செய்திருந்த குற்ற எண். 825/2024 சட்டப்பிரிவுகள் 191(ii), 296(b), 132 BNS ன் கீழ் பதிவு செய்திருந்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார், ராஜபூபதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ஹேமாவதி, தீபலட்சுமி, உமா, பிரியா, ரஞ்சித்குமார், ராஜபூபதி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு

உதவி ஆய்வாளர் செந்தில்ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவ உண்மை என தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் எதிரிகளுக்கு எதிராக எனது இறுதி விசாரணை முடித்து அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னுடைய புலன் விசாரணையை மாலை 5.00 மணி அளவில் தொடங்கினேன். சம்பவம் நடந்த இடம் தேம்பாடி அம்மன் கோவில் அருகே நடந்தது. அந்த தேம்பாடி அம்மன் கோவில களரம்பட்டி பெரிய ஏரிக்கரையில் அமைந்துள்ளது. அந்த தேம்பாடி அம்மன் கோவில் இந்து அறநிலைய துறையின் கீழ் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் எந்த சாதியினரும் வழிபடலாம் என்றால் சரிதான். குறிப்பாக அந்த கோவிலில் தேவேந்திரகுல வேளாளர் குல மக்கள் வழிப்படக்கூடாது என்ற தடை எதுவும் இல்லை. சம்பவம் நடந்தபோது காவல் துறை அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள், இந்து அறநிலை துறை அதிகாரிகள் இருந்தனர் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவம் நேரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அ.சா. 1 தன்னுடைய புகாரில் புகார் கொடுத்த நாள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா. 1 புகாரினை உதவி ஆய்வாளரிடம் கொடுத்தார் என்றால் சரிதான். அ.சா.1அவருடைய நீதிமன்ற விசாரணையின்போது புகாரினை காவல் ஆய்வாளரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சிகளான இருவரில் ஒருவர் அம்மாபாளையத்தை சேர்ந்தவர், மற்றொருவர் களரம்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். அம்மாபாளையத்தை சேர்ந்த பார்வை மகசர் சாட்சியான ராஜபூபதிக்கு களரம்பட்டியில் நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். களரம்பட்டியை சேர்ந்த லோகநாதன் மகன் ரஞ்சித் என்பவரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

லோகநாதன் மகன் ரஞ்சித் என்பவர் களரம்பட்டியில் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் ஆகியவைகளை 02.11.2025 அன்று தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் வரைபடங்களை 17.02.2025 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 கொடுத்த புகாரில் அவருக்கு எதிராக தாக்குதலோ அல்லது கிரிமினல் போர்சோ செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்ன தகாத வார்த்தை சொல்லி திட்டினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்ததில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்த வழக்கினை சரியாக புலன் விசாரணை செயயாமல் தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.